# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர்:முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A., PGDJMC.,Ph.D. DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர்: முனைவர்: ஃபாரூக் அலி எம். B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 187 | சனிக்கிழமை Saturday | 03.10.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


## வெற்றிப்பயணம் திட்டம் தொடக்கம்:

# பெண்களுக்கு இலவச டிக்கெட் முதலமைச்சர் விஜய் வழங்கினார்



தமிழகம் முழுவதும் மகளிருக்கான இலவச பேருந்து வெற்றிப்பயணம் திட்டத்தை முதல்-அமைச்சர் விஜய் தொடங்கி வைத்தார்.

தமிழகத்தில் பெண்களுக்கான கட்டணமில்லா விடியல் பயண திட்டத்தை கடந்த தி.மு.க. அரசு அறிமுகம் செய்தது. இந்ததிட்டத்தின்படி, மாநகர மற்றும் நகர்ப்புற சாதாரண அரசு பேருந்துகளில் மட்டும் பெண்கள் இலவசமாக பயணித்து வருகின்றனர்.

கடந்த சட்டசபை தேர்தலின்போது த.வெ.க. வெளியிட்ட தேர்தல் அறிக்கையில், த.வெ.க. ஆட்சி அமையும்போது மகளிர் பயணத்திட்டம் அனைத்து அரசு பேருந்துகளிலும் விரிவாக்கம் செய்யப்படும் என்று வாக்குறுதி அளிக்கப்பட்டது.

**வெற்றிப் பயணம்**

தேர்தலில் வெற்றி பெற்று த.வெ.க. தலைமையிலான அரசு பொறுப்பேற்றநிலையில், கடந்த ஆகஸ்ட் 24-ந்தேதி சட்டசபையில் 110 விதியின் கீழ் அறிவிப்பை வெளியிட்ட முதல்-அமைச்சர் விஜய், தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் மகளிர் கட்டணமில்லாபயணத்திட்டம், 'வெற்றிப் பயணம்' என்ற பெயரில், விரிவுபடுத்தப்படும் என்று அறிவித்தார்.

இத்திட்டத்தில் பயன்பெற, வருமான உச்சவரம்பு மற்றும் பயண எண்ணிக்கையில் கட்டுப்பாடுகள் கிடையாது. அதோடு, வெற்றிப் பயணத் திட்டம், இதர சேவைகளிலும் படிப்படியாக விரிவுபடுத்தப்படும் என்றும் முதல்-அமைச்சர் விஜய் தனது அறிவிப்பில் குறிப்பிட்டு இருந்தார்.

**திட்டம் தொடக்கம்**

இந்த நிலையில் வெற்றிப் பயணம் திட்டத்தை முதல்-அமைச்சர் விஜய், சென்னை கோயம்பேட்டில் உள்ள பேருந்து நிலையத்தில் இன்று தொடங்கி வைத்தார். பின்னர் பேருந்தில் ஏறி பெண் பயணிகளுக்கான இலவச டிக்கெட்டுகளை முதல்-அமைச்சர் விஜய் வழங்கினார். ஒவ்வொரு இருக்கைக்கும் சென்று அங்கு அமர்ந்திருந்த பெண்களுக்கு டிக்கெட்டுகளை வழங்கினார்.

அப்போது முதல்-அமைச்சர் விஜய்க்கு பெண் பயணிகள் சாக்லெட் கொடுத்தும், கைகளால் சுத்திபோட்டும் நன்றியை தெரிவித்தனர். பதிலுக்கு விஜய்யும் அவ்வாறு செய்தார். மேலும் பெண் பயணிகளுடன் அமர்ந்து முதல்-அமைச்சர் புகைப்படம் எடுத்துக்கொண்டார்.

முதல்-அமைச்சர் விஜய் இந்த திட்டத்தை தொடங்கி வைத்ததை தொடர்ந்து தமிழகம் முழுவதும் பெண்கள் இந்த திட்டத்தின் மூலம் இலவச அரசு பேருந்து பயணம் மேற்கொண்டு பயனடையலாம். இத்திட்டத்தின் கீழ் திருநரும் (திருநங்கைகள்) கட்டணமில்லா பயணங்கள் மேற்கொள்ளலாம். இத்திட்டத்திற்காக ஆண்டுதோறும் ரூ.6 ஆயிரம் கோடி செலவினம் ஏற்படும் என்று அரசு கணித்துள்ளது.

**12,695 பேருந்துகள்**

தற்போது, 7 அரசு போக்குவரத்துக் கழகங்களின் நகர சாதாரண பேருந்துகள் மற்றும் 40 கி.மீ. வரையிலான மலைப்பகுதி சாதாரண பேருந்துகளில் பெண்கள் கட்டணமின்றி பயணம் செய்து வருகின்றனர். ஆனால் வெற்றிப் பயண திட்டத்தின் மூலம் இச்சேவை மாநகர, நகர்ப்பகுதிகளில் இயங்கும் எக்ஸ்பிரஸ், எல்.எஸ்.எஸ்., டீலக்ஸ் அரசு பேருந்துகள், புறநகர் சாதாரண அரசு பேருந்துகள் மற்றும் 40 கி.மீ.க்கு மேற்பட்ட மலைப்பகுதி சாதாரண அரசு பேருந்துகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டு, மொத்தமாக 12,695 பேருந்துகள் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்படவுள்ளன.

அதாவது, 7 அரசு போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படும் மொத்தமுள்ள 18,413 பேருந்துகளில், 12,695 பேருந்துகள் இந்த திட்டத்திற்கு பயன்படுத்தப்படும். அதுபோல், மொத்தமுள்ள நடைகளில், 1 லட்சத்து 68 ஆயிரத்து 500 நடைகள் இந்தத் திட்டத்தில் செயல்படுத்தப்படும். இதன் மூலம் நாளொன்றுக்கு சுமார் 84.32 லட்சம் பெண்கள் பயனடைய உள்ளனர்.

# இந்திய விமானி ஸ்மித் மச்சாருடன் வீடியோ காலில் பேசி நலம் விசாரித்த பிரதமர் மோடி





துபாயில் இருந்து டெல் அவிவ் நோக்கி சென்ற பிளைதுபாய் விமான த்தில், துணை விமானி விமானத்தின் கட்டுப்பாட்டை கைப்பற்ற முயன்றதாக கூறப்படுகிறது. அவரை தடுக்க முயன்ற கேப்டன் ஸ்மித் மச்சார் கத்தியால் குத்தப்பட்டு பலத்த காயமடைந்தார். எனினும், காயத்தையும் பொருட்படுத்தாமல் துணை விமானியை எதிர்த்து போராடிய ஸ்மித் மச்சார், காக்பிட் கதவை திறந்தார். இதையடுத்து பயணிகள் மற்றும் விமான ஊழியர்கள் இணைந்துதுணை விமானியை கட்டுப்படுத்தினர்.

பின்னர் விமான த்தில் இருந்த மற்றொரு விமானி விமானத்தை சவுதி அரேபியாவின் தபுக் நகருக்கு பாதுகாப்பாக திருப்பி தரையிறக்கினார்.

இந்த சம்பவத்தில் 170-க்கும் மேற்பட்ட பயணிகள் உயிர் தப்பினர். தீரத்துடன் செயல்பட்ட ஸ்மித் மச்சார் இந்தியாவை சேர்ந்தவர் ஆவார். குஜராத்தை சேர்ந்த விமானி ஸ்மித் மச்சாருக்கு உலக நாடுகளின் தலைவர்கள் பாராட்டுகளை தெரிவித்து வருகிறார்கள்.

**ஊக்கமளிக்கிறது**

இந்த நிலையில், பிரதமர் மோடி இன்று வீடியோ கால் வாயிலாக தொடர்பு கொண்டு பேசினார். அப்போது கேப்டன் ஸ்மித் மச்சாரின் துணிச்சலை பிரதமர் மோடி பாராட்டினார். மேலும்,

அவர் விரைவில் குணமடைய வாழ்த்து தெரிவித்தார். இந்த தொலைபேசி உரையாடலின் போது, விமானத்தில் நடந்தது என்ன? துணை விமானியின் சதி முயற்சியை முறியடிக்க துணிச்சலாக செய்த நடவடிக்கைகள் பற்றி விமானி எடுத்துரைத்தார். மேலும், நீங்கள்தான் (மோடி) எனக்கு மிகப்பெரிய முன்னுதாரணம். நீங்கள் என்னிடம் பேசியது எனக்கு ஊக்கமளிக்கிறது" என்றும்மோடியிடம் கூறினார்.

# 'பொருளாதாரம் முதல் சட்டம் ஒழுங்கு வரை எல்லாவற்றிலும் தமிழகம் வீழ்ச்சி': தி.மு.க. தலைவர் ஸ்டாலின் கண்டனம்



சென்னை: "பொருளாதாரம், விலைவாசி, மின்சாரம், தொழில்துறை, சட்டம் ஒழுங்கு, மருத்துவம், பால்வளம் என எல்லாவற்றிலும் தமிழகம் வீழ்ச்சியை நோக்கி வேகமாகச் சென்றுகொண்டிருக்கிறது. ரீல்ஸ் பார்த்தால் மக்களின் வயிறு நிறையுமா?" என திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், "எம்எல்ஏ ஷாப்பிங்கில் மும்முரமாக இருக்கும் முதல்வருக்கும், மக்கள் மளிகைக் கடையில் கூட ஷாப்பிங்செய்ய முடியாமல் கஷ்டத்தில் தவிப்பது தெரியுமா? தாராபுரத்தில் பரப்புரைக்கு இடையே மளிகைக் கடை ஒன்றில் விலைவாசி உயர்வு குறித்து கேட்டேன். 4 மாதம் முன்பிருந்த விலையில் இருந்து அத்தியாவசியப் பொருட்களின் விலை பெருமளவுக்கு உயர்ந்துள்ளது.

அன்றாடச் சமையலுக்கே வீடுகள் விழிபிதுங்கி நிற்கின்றன. ரீல்ஸ் பார்த்தால் மக்களின் வயிறு நிறையுமா? இந்தியா முழுவதும் பொருளாதார வளர்ச்சி இறங்குமுகத்தில் இருந்தபோது கூட, திராவிட மாடல் ஆட்சியில் தமிழகம் ஏறுமுகத்தில் இருந்தது.

ஆனால் இன்றைய நிலை என்ன?

இந்தியா முழுவதும் ஜிஎஸ்டி வருவாய் உயர்ந்த நிலையில் கூட, கடந்த மூன்று மாதங்களாகத் தமிழ்நாடு சரிவைச்சந்தித்து வருகிறது. இந்த ஆட்சி வேலைக்கு ஆகாத வேஸ்ட் ஆட்சி என முடிவெடுத்து, தமிழக அரசின் முதலீட்டு ஊக்குவிப்பு முகமையான Guidance TN-இல் இருந்தும் அனுபவமிக்க வல்லுநர்கள் வேறு மாநிலங்களுக்குச் செல்வதாகச் செய்திகள் வருகின்றன.

பொருளாதாரம், விலைவாசி, மின்சாரம், தொழில்துறை, சட்டம் ஒழுங்கு, மருத்துவம், பால்வளம் என எல்லாவற்றிலும் தமிழகம் வீழ்ச்சியை நோக்கி வேகமாகச் சென்றுகொண்டிருக்கிறது.

இவற்றில் கவனம் செலுத்தாமல், விளக்குமாத்துக்குப் பட்டுக் குஞ்சம் என்பது போல எல்லாவற்றிலும் 'வெற்றி' என ஸ்டிக்கர் ஒட்டினால் போதும் என நினைக்கும் அரசிடம் மாட்டிக்கொண்டு மக்கள் தவிக்கின்றனர்"

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.


**செய்திகள்**

**உடனுக்குடன் படிக்க**

**தினத்தளம்**

DHINATH DHALAM

**வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்**

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# போக்குவரத்து காவல் துறையினர்களை நியமிக்க தமிழக அரசுக்கு காயல் அப்பாஸ் கோரிக்கை



போக்கு வரத்து காவல் துறையினர்களை நியமிக்க தமிழக அரசுக்கு மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சியின் மாநில தலைவர் காயல் அப்பாஸ் கோரிக்கை விடுத்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

தூத்துக்குடி மாவட்டம்,காயல் பட்டிணத்தில் ஒருவழி சாலைகளில் மோட்டர் பைக் மற்றும் ஆட்டோக்கள் எதிரும் முதிருமாக செல்கின்றன. மேலும் மெயின் பஜார்சாலையில்மோட்டார் பைக்களையும் சாலையிலும் நிறுத்தி வைக்கின்றனர். இதனால் போக்கு வரத்துக்கு இடையூராகவும்பேருந்து மற்றும் கனரக வாகன ஒட்டிகள் மிகவும் சிரமம் பட்டு வாகனத்தை இயக்கி வருகின்றனர். ஆகவே . ஒரு வழிச்சாலையில் போக்கு வரத்து இடையூர்களைசரிசெய்யும் வகையில் காலை முதல் இரவு வரையிலும் நிரந்தரமாக போக்கு வரத்து காவல் துறையினர்களை நியமிக்க வேண்டும் என தமிழக அரசை மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சி வலியுறுத்துகிறது.

மேலும். ஒட்னர் உரிமம் இல்லாமல் சிறுவர்கள் மோட்டார் பைக்குகளை இயக்கி வருவதனால் சாலை விபத்துக்குள்ளாகி வருகின்றனர். மேலும். இது போன்று சம்பவங்கள் நடை பெறாமல் தடுக்க மோட்டார் பைக்களை இயக்கும் சிறுவர்களின் பெற்றோர்கள் மீது வழக்கு மற்றும் சிறை தண்டனை சட்டத்தின் மூலம் காவல்துறையினர் நடவடிக்கை எடுத்தால் மட்டுமே சாலைகளில் நடை பெறும் விபத்துக்களை தடுக்க முடியும்.

எனவே : மது போன்ற போதைகளால் ஒரு சிலர் மோட்டார் பைக் வாகனத்தை இயக்கி வருகின்றனர். இதனை கண்டறியும் வகையில் முழுமையானசோதனை செய்து மது போதையில் வாகனத்தை இயக்குவர்கள் மீது சட்ட ரிதியான அபதாரமும் அவ் வாகனத்தை பறிமுதலும் செய்ய வேண்டும் எனவும் ஒரு வழிச்சாலையில் இடையூராக நிற்க்கும் மோட்டார் பைக்குகள் மீதும் எதிரே வரும் அனைத்து வாகனத்தின் மீது காவல் துறையினர்தகுந்தநடவடிக்கையை உடனடியாக எடுக்க வேண்டும் என மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சியின் சார்பாக கேட்டு கொள்கிறோம். இவ்வாறு காயல் அப்பாஸ் கூறியுள்ளார்.

# நெல்லை மாவட்டத்தில் ரூ.361 கோடி கூட்டுக் குடிநீர் திட்டப் பணிகளில் முறைகேடு நடந்ததாக புகார்




நெல்லை மாவட்டத்தில் ரூ.361 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் கூட்டுக் குடிநீர் திட்டப் பணிகளில் முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாகவும் இது குறித்து சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் உரிய விசாரணை நடத்த வேண்டும் என்றும் ஒப்பந்ததாரர் வலியுறுத்தியுள்ளார் இதுகுறித்து நெல்லையை சேர்ந்த தனியார் நிறுவன உரிமையாளரும் கூட்டு குடிநீர் திட்ட பணிகளின் ஒப்பந்ததாரருமான சிவலிங்கம் செய்தியாளர்களிடம் கூறியதாவது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் கீழ் ரூ.361 கோடி மதிப்பீட்டில் நெல்லை மாவட்டத்தில் 831 கிராமங்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர் திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன களக்காடு. சிங்கிகுளம் வள்ளியூர். ராதாபுரம்கன்னங்குளம். லெவஞ்சிபுரம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன இந்த பணிகளில் மேல்நிலை நீர் தேக்கத்தொட்டிஅமைத்தல். குடிநீர் குழாய்கள் பதித்தல்.சுற்றுச்சுவர் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகளில் முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாகத்ம் தெரிகிறது ரூ.361 கோடி மதிப்பீட்டில் திட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும்நிலையில் ஒருசில கோடி ரூபாய் மட்டுமே செலவிடப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. இது குறித்து ஏற்கனவே சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் மற்றும் லஞ்ச ஒழிப்புத்துறையிடம் புகார் அளித்துள்ளோம் ஆனால் இதுவரை உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை இது தொடர்பாக தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் தகவல்கள் கூறிய போது பல்வேறு தகவல்கள் கிடைத்துள்ளன. எனவே கூட்டு குடிநீர் திட்டப்பணிகளில் கூறப்படும் முறைகேடுகள் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முறையாக விசாரணை நடத்தி உண்மை நிலையை வெளி கொண்டுவர வேண்டும் என்று தனியார் நிறுவன உரிமையாளரும் கூட்டுக் குடிநீர் திட்டப் பணிகளின் ஒப்பந்ததாரருமான சிவலிங்கம் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.



ஆலங்குளம்சட்டமன்றதொகுதிகடையம்வடக்குஒன்றியம்சேர்வைக்காரன்பட்டிஊராட்சிநறையப்பபுரம்அருள்மிகு முப்புடாதி அம்மன் 7ம் திருநாளை முன்னிட்டு சக்தி குழு பெருந்தலைவர் காமராஜர் நற்பணி மன்றம் இணைந்து நடத்தும் மாபெரும் அன்னதானம் நிகழ்ச்சி நடைபெற்றது இதில் சிறப்பு விருந்தினராக முன்னாள் மாவட்ட கழக செயலாளர் பொ.சிவபத்மநாதன் அவர்கள் கலந்து கொண்டு அன்னதானத்தை துவக்கி வைத்தார் நிகழ்ச்சியில் ஊர் தலைவர் G. நாராயண பெருமாள்,ஊர் துணைத் தலைவர் செல்வமதியழகன்,வழக்கறிஞர் விஜயன்,நிருபர் மணிரத்தினம்,முத்தூட் பைனான்ஸ் மேனேஜர் மாரிமுத்து,சக்தி முருகன்,ஹரிராம்,ஜீவா,செல்வகுமார்,சசிகுமார் மேலும் கழக நிர்வாகிகள் கடையம் வடக்கு ஒன்றிய செயலாளர் மகேஷ் மாயவன் ஒன்றி அவைத் தலைவர் ஆ.ரவி,யூனியன் ஆத்மா சேர்மன் குணசீலன்,மாவட்ட சிறுபான்மை அணி துணை அமைப்பாளர் லூர்து அற்புதராஜ்,விடியல் ஆர்த்தி,சுந்தர்ராஜ்,சோமு சுந்தரம்,முருகேசன் மற்றும் ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்

# அ.சாத்தான்குளம் கிராமத்தில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு முகாம்



திருநெல்வேலி மாவட்டம்,நாங்குநேரி வட்டம், அ.சாத்தான்குளம் கிராமத்தில் சில்ட்ரன் சாரிடபிள் டிரஸ்ட் சார்பில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் குப்பைகளை தரம் பிரித்தல் குறித்த விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் திடக்கழிவு மேலாண்மை சட்டம் 2026 மற்றும் கழிவுகளின் பல்வேறு வகைகள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

வீடுகள் மற்றும் பொது இடங்களில் உருவாகும் கழிவுகளை முறையாக தரம் பிரித்து அகற்றுவதன் மூலம் சுற்றுச்சூழலை பாதுகாப்பதன் அவசியம் குறித்து விளக்கப்பட்டது.

மேலும், மக்கும் கழிவுகள், மக்காத கழிவுகள், மறுசுழற்சி செய்யக்கூடிய கழிவுகள் மற்றும் அபாயகரமான கழிவுகள் உள்ளிட்ட பல்வேறு வகையான கழிவுகளை அடையாளம் கண்டு, அவற்றை முறையாக கையாளும் வழிமுறைகள் குறித்தும் விழிப்புணர்வு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை சில்ட்ரன் சாரிடபிள் டிரஸ்ட் சார்பில் திருநெல்வேலி மாவட்ட நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் ஆனஸ்ட் புஷ்பராஜ் செய்திருந்தார்.



# பொறியாளர் தின விழா: TEC மாணவர்களின் 76 புதுமையான திட்டங்கள் கண்காட்சி

பொறியாளர் தினத்தை முன்னிட்டு Tagore Engineering College (TEC) சார்பில் மாணவர்களுக்கான புதுமையான திட்டக் கண்காட்சி நடைபெற்றது.

நிகழ்ச்சியில் மெட்ராஸ் புரொடக்டிவிட்டி கவுன்சில் மற்றும் தேசிய உற்பத்தி கவுன்சில் ஆலோசகரும்,தொழில்துறை உபகரணங்கள் R&D துறையைச் சேர்ந்தவருமான திரு. என்.டி. ஜெயபிரகாஷ் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

கண்காட்சியில் TEC மாணவர்கள் தங்களது 76 புதுமையான பொறியியல் திட்டங்கள், தொழில்நுட்ப மாதிரிகள் மற்றும் கண்டுபிடிப்புகளை காட்சிப்படுத்தினர். மாணவர்களின் திட்டங்களை பார்வையிட்ட பிரதம விருந்தினர், அவர்களுடன் கலந்துரையாடி திட்டங்கள்தொடர்பான ஆலோசனைகளை வழங்கினார். மாணவர்களின் படைப்பாற்றல் மற்றும் தொழில்நுட்பத் திறனை ஊக்குவிக்கும் வகையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் சுமார் 300 பேர் பங்கேற்றனர். மாணவர்களின் புதுமையான சிந்தனைகளை வெளிக்கொணரும் வகையில் கண்காட்சி சிறப்பாக அமைந்தது.



தென்காசி மாவட்டம், செங்கோட்டை ஊராட்சி ஒன்றியம்,கற்குடி ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் திரு.ரஞ்ஜீத் சிங், இ.ஆ.ப., அவர்கள் இன்று 2.10.26 பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகள் பயனாளிகளுக்கு வழங்கினார். இந்நிகழ்வில் திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை முனைவர்.ஆ.ரா. சிவராமன் அவர்கள், திட்ட இயக்குநர்,தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்( மகளிர் திட்டம்) மரு.தண்டபாணி அவர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.



தென்காசி மாவட்டம், செங்கோட்டை ஊராட்சி ஒன்றியம்,கற்குடி ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் திரு.ரஞ்ஜீத் சிங், இ.ஆ.ப., அவர்கள் இன்று 2.10.26 சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

# தேசிய அளவிலான Hand to Hand Fighting Sport போட்டியில் தென்காசி மாணவ, மாணவியர் சாதனை!



ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூரில் நடைபெற்ற 6-வது தேசிய அளவிலான Hand to Hand Fighting Sport போட்டியில் தென்காசி மாவட்டத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியர் பல்வேறு பதக்கங்களை வென்று சாதனை படைத்தனர்.

தமிழ்நாடு Hand to Hand Fighting Sport கழக மாநிலத் தலைவர் முகமது அனாஸ் ஆலோசனையின் பேரில், தென்காசி மாவட்ட Hand to Hand Fighting Sport கழகத் தலைவர் ஜெகதீஸ் தலைமையில் மாணவ, மாணவியர் தேசிய போட்டியில் பங்கேற்றனர்.

இதில் ஜெகதீஸ் மற்றும் அபிபாலா ஆகியோர் தங்கப்பதக்கமும், ஆதர்சினி நாச்சியார் வெள்ளிப் பதக்கமும், வர்ஷனா, ஹாசினி, சுதேவ் நாராயணா, ஈஸ்வர் ஆகியோர் வெண்கலப் பதக்கமும் வென்று தென்காசி மாவட்டத்திற்கு பெருமை சேர்த்தனர். மேலும், தற்காப்புக் கலைப் பிரிவில் ஆதர்சினி நாச்சியார் வெள்ளிப் பதக்கமும், அபிபாலா வெண்கலப் பதக்கமும் வென்று சாதனை படைத்தனர்.

தேசிய அளவிலான போட்டியில் பதக்கங்கள் வென்று சாதனை படைத்த மாணவ,மாணவியரை பெற்றோர்கள், பள்ளி ஆசிரியர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் பாராட்டினர்.

# தொளசம்பட்டியில் கிராம சபைக் கூட்டம்



சேலம் மாவட்டம், ஓமலூர் அருகே உள்ள தொளசம்பட்டியில்காந்திஜெயந்தியைமுன்னிட்டு கிராம சபைக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொதுநிதி செலவினம், தூய்மையான குடிநீர் விநியோகம்,மகாத்மா காந்தி தேசிய ஊரகவேலை உறுதித் திட்டம், சிறுபாசனக் குளங்கள் மற்றும் ஏரிகளைப் புதுப்பித்தல், ஜல் ஜீவன் திட்டம், தூய்மை பாரத இயக்கம் உள்ளிட்ட பல்வேறு பொருள்கள் குறித்து விவாதிக்கப்பட்டன.

மேலும், தமிழக வெற்றி கழக நிர்வாகிகள் பொதுமக்களின்அடிப்படைத்தேவைகள் குறித்தும் கலந்துரையாடினர். இதில் தவெக நிர்வாகிகள் குணா,ஜோதிமுருகன்,தயாளநீதி(எ)தீனதயாளன், பிரபாகரன், அன்பு, கோகுல் உள்ளிட்டோர், துறை சார்ந்த அரசு அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

தினத்தூதளம் தினசரி காலை நாளிதழ்


# ஈரோட்டில் காமராஜர், காந்தி, சாஸ்திரிக்கு காங்கிரஸ் மரியாதை



ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பாக ன்று முப்பெரும் தலைவர்களுக்கு மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது.

தந்தை பெரியார் தலைமை அரசு மருத்துவமனை எதிரே உள்ள பெருந்தலைவர் காமராஜர் சிலைக்கு இவரது நினைவு நாளை முன்னிட்டு முன்னாள் மாவட்ட தலைவர் டி. திருச்செல்வம் தலைமையில் பொதுசெயலாளர்களான இரா கனகராஜன், டெக்ஸ் அன்பழகன், வி கே சச்சிதானந்தம் ஆகியோர் முன்னிலையில் ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் பா.ராஜேஷ் ராஜப்பா மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

ஈரோடு மாநகர் கருங்கல்பாளையம் உத்தமர் காந்தியடிகள் சிலைக்கு, முன்னாள் மாவட்ட தலைவரும் மாமன்ற உறுப்பினருமான ஈ.பி. ரவி தலைமையில் ஈரோடு மாவட்ட காங்கிரஸ் சேவாதளம் தலைவர் எஸ்.முகமது யூசுப் முன்னிலையில், ஈரோடு மாநகர் மாவட்ட தலைவர் பா.ராஜேஷ் ராஜப்பா மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

முன்னாள் பாரதபிரதமர் லால் பகதூர் சாஸ்திரி அவர்களின் திருவுருவப்படத்திற்கு, மண்டலத் தலைவர் மாமரத்துப்பாளையம் எஸ்.கோபி தலைமையில் இரண்டாம் மண்டல தலைவர் ஆர் விஜயபாஸ்கர் முன்னிலையில் மாநில பொதுக்குழு உறுப்பினர் எ.மாரியப்பன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இந்த முப்பெரும் நிகழ்ச்சியில் ஈரோடு கௌதமன், தமிழ்நாடு காங்கிரஸ் சிறுபான்மை துறை மாநில முதன்மை துணைத் தலைவர் எம். ஜவஹர் அலி, தமிழ்நாடு காங்கிரஸ் வழக்கறிஞர் பிரிவு மாநில செயலாளர் சி.எம்.ராஜேந்திரன், மாவட்ட பொதுச்செயலாளர்கள, ஏ.சி.சாகுல் ஹமீது, ஈரோடு மாவட்ட காங்கிரஸ் ஊடகப்பிரிவு தலைவர் ம.முகமது அர்சத், மாவட்ட காங்கிரஸ் சிறுபான்மை துறை துணைத் தலைவர் கே. என்.பாஷா, தமிழ்நாடு இளைஞர் காங்கிரஸ் மாநில ஒருங்கிணைப்பாளர் சங்கு நகர் சதாம் உசேன், மாவட்ட நிர்வாகிகளான சூரம்பட்டி விஜயகுமார், வள்ளிபுரத்தான்பாளையம் எஸ். தங்கவேலு, எம்.வி.விஜயராகவ், மூத்த சிறுபான்மை துறை நிர்வாகி ஈ.எம்.சிராஜுதீன், ஏ. நூருதீன், தேனி சுந்தர்ராஜன் , வார்டு தலைவர்களான பெரியார் நகர் சூரஜ், ராஜாஜிபுரம் குமரேசன், கே.ரவி, சென்னிமலை கிழக்கு வட்டாரத் தலைவர் இளங்கோவன், கனிராவுத்தர்குளம் சபீர் அகமது, வாட்டர் சிவாஜி, கௌசிக் சரவணன் மற்றும் பலர் திரளாக கலந்து கொண்டனர். மகாத்மா காந்திஜி சிலைக்கு மின்விளக்குகளால் ஈரோடு மாவட்ட காங்கிரஸ் சேவா தளம் அலங்கரித்து வைத்திருந்தனர்.



தென்காசி மாவட்டம், அண்ணல் காந்தியடிகளின் 158 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு வடக்கு ரத வீதியில் உள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு மாவட்ட ஆட்சியர் திரு.ரஞ்ஜீத் சிங், இ.ஆ.ப., அவர்கள் இன்று 2.10.26 மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. மா.வீராசாமி,திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை முனைவர்.ஆ.ரா. சிவராமன் அவர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்

# கோவையில் காந்தி ஜெயந்தியை முன்னிட்டு ஒற்றுமை, சுதந்திர உணர்வு, ஒழுக்கம் உள்ளிட்டவற்றை வலியுறுத்தி 157 சைக்கிளிஸ்டுகள் பிரமாண்ட பேரணி



நாட்டின் சுதந்திரத்துக்காகஅகிம்சைவழியில் போராடிய மகாத்மாக காந்தடிகள் 157 வது பிறந்தநாளில், "காந்தி ஜெயந்தி சைக்கிள் விழிப்புணர்வு 2026" நடைபெற்றது.பிரமாண்டமாக நடந்த சைக்கிள் பேரணியில் 6 வயது முதல் 75 வரையில் 157 சைக்கிளிஸ்டுகள் பங்கேற்றனர். இதில் கோவை மாநகர காவல் துறை அதிகாரிகளும் பங்கேற்றனர். நவஇந்திய ஸ்டோர்ஸ் ஹைவ் பகுதியில் தொடங்கிய சைக்கிள் பேரணி, அவிநாசி சாலையில் சிட்ரா, நீலம்பூர் வழியாக கருமத்தம்பட்டி வரை சென்று மீண்டும் அதே வழியாக நவ இண்டியா ஸ்போர்ஸ் ஹைவ் பகுதிக்கு வந்தடைந்தனர். 2 மணி நேரம் நடந்த பிரமாண்ட சைக்கிள் பேரணியில் 50 கி.மீ. தூரம் பயணித்தனர். பேசிய சமூக ஆர்வலரும், சைக்கிளிஸ்டுமான ஜி.டி. விஷ்ணுராம், 'நாட்டின் ஒற்றுமை, சுதந்திர உணர்வு, ஒழுக்கம், போதைப்பொருள் எதிர்ப்பு உள்ளிட்டவற்றை வலியுறுத்தி இந்த சைக்கிள் பேரவையை நடத்தினோம். வளமான தேசத்திற்கு அடிப்படை தன்னலமற்ற தேசப்பற்று. நாட்டின் ஒற்றுமை, ஒழுக்கம் போன்றவை இந்த தலைமுறை கடைபிடிக்க வேண்டியது அவசியமானதாக இருக்கின்றன. நாட்டின் வருங்கால தலைமுறையை காக்க போதையில்லா தேசத்தை கட்டமைக்க வேண்டியதும் அவசியமாக இருக்கின்றன. இது போன்ற அனைத்து சமூக சார்ந்த விழிப்புணர்வுக்கும், விளையாட்டு தரும் நம்பிக்கையும் ஒழுக்கமும் நம்மை வளப்படுத்தும் விதத்தில் அமையும் என்பதே அடிப்படை. அந்த நம்பிக்கையிலேயே, இந்த பிரமாண்ட சைக்கிள் பேரணி நடைபெற்றது. நாட்டின் சுதந்திரத்திற்காக பாடுபட்ட தியாகிகளின் உணர்வை நாம் போற்றி, இந்த தேசத்தை உலகின் வளமான தேசமாக மிளிர அனைவரும் ஒன்றிணை வேண்டும்" என தெரிவித்தார்.

# தூத்துக்குடியில் உலக இதய தினத்தை முன்னிட்டு அருணா கார்டியாக் கேர் சார்பில் விழா: சிறந்த ஆசிரியர்களுக்கு விருது



உலக இதய தினத்தை முன்னிட்டு தூத்துக்குடி அருணா கார்டியாக் கேர் மருத்துவமனை சார்பில் சிறந்த ஆசிரியர்களுக்கான விருது வழங்கும் விழா நடைபெற்றது.

விழாவில் தூத்துக்குடி அருணா கார்டியாக் கேர் மருத்துவமனை நிர்வாகம் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் கலந்துகொண்டு, கல்வித் துறையில் சிறப்பாகப் பணியாற்றி வரும் ஆசிரியர்களுக்கு விருதுகளை வழங்கி பாராட்டினர்.

விழாவிற்கு அருணா கார்டியாக் கேர் மருத்துவமனையின் கன்சல்டன்ட் இன்டர்வென்ஷனல் கார்டியாலஜிஸ்ட் டாக்டர் E. அருணாசலம் மற்றும் நிர்வாக இயக்குநர் டாக்டர் சொர்ணலதா அருணாசலம் ஆகியோர் தலைமை வகித்தனர். சிறப்பு கௌரவ விருந்தினர்களாக ஹோலிகிராஸ் பொறியியல் கல்லூரி முதல்வர் டாக்டர் M. வரத விஜயன் மற்றும் தமிழ்நாடு அரசு மாவட்ட இசைப்பள்ளி தலைமை ஆசிரியர் சிவகாமசெல்வி, சி.இ.ஓ. ராமன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் பேசிய முதன்மைக் கல்வி அலுவலர் ராமன், சமூக வளர்ச்சியில் ஆசிரியர்களின் பங்கு முக்கியமானது என்றும், ஆசிரியர்களின் நல்வாழ்வும் ஆரோக்கியமும் அவசியம் என்றும் வலியுறுத்தினார்.

ஆசிரியர்களின் கல்விச் சேவையை அங்கீகரிக்கும் வகையில் விருதுகள் வழங்கப்பட்ட இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை அருணா கார்டியாக் கேர் மருத்துவமனை நிர்வாகத்தினர், மருத்துவர்கள் மற்றும் பணியாளர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

# கோவை லக்ஷ்மி மில்ஸ் வளாகத்தில் ஜப்பானிய இகெபானா பாணியில் நவராத்திரி கொலு



நவராத்திரி விழாவை முன்னிட்டுத் பாரம்பரியக் கலைகள், கைவினைப் பொருட்கள் மற்றும் கலாச்சார நினைவுகளை ஒன்றிணைக்கும் வகையில், 'சங்கல்பம்' பண்பாட்டுக் கண்காட்சி கோவை லக்ஷ்மி மில்ஸ் நகர்ப்புற மையத்தில் தொடங்கியது.

தெய்வீகப் பெண்மையின் சக்தி, படைப்பாற்றல் மற்றும் மீள்திறனைக் கொண்டாடும் வகையில் இக்கண்காட்சி ஒருங்கிணைக்கப்பட்டு உள்ளது. கிருஷ்ண பரிஜாதாவின் விஜயலட்சுமி ருத்ரப்பன், ஹல்தி குங்குமத்தின் அபிஷேக் எஸ். மூர்த்தி, ஆராடிசைனின் அபர்ணா வெங்கடேஷ் மற்றும் சரண்யா கோகினேனி ஆகியோரின் கூட்டுப் பங்களிப்பில் இக்கண்காட்சி காட்சிபடுத்த பட்டுள்ளது.

தென்னிந்திய பாரம்பரிய சடங்குகள், மலர்க் கலைகள், கைத்தறி நெசவு, பாரம்பரிய ஆபரணங்கள் மற்றும் சிற்பங்கள் உள்ளிட்டவை இந்தக் கண்காட்சியின் முதன்மை அம்சங்களாகக் காட்சிப்படுத்தப்பட்டு உள்ளது.

ஜப்பான் நாட்டின் ' இகெபானா' பாணியில் புதுமையான கொலுவாக நடைபெற்ற இந்த கண்காட்சியில், இந்தியா முழுவதிலும் இருந்து சுமார் 21 தேவி சிலைகள் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. நவராத்திரி கொலுவின் பாரம்பரியத்தைப் பிரதிபலிக்கும் வகையில், ஜப்பான் நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட புகழ்பெற்ற ஒக்கா மீனாட்சி தேவி மற்றும் அவரது குழுவினர் சிறப்புப் பங்காற்றி உள்ளனர். ஜப்பானிய பாரம்பரிய மலர் அலங்கார முறையான 'இகெபானா' நுட்பத்தைப் பயன்படுத்தி, நவீனக் கலாச்சாரமும் நமது தென்னிந்திய மரபும் இணையும் வகையில் இக்கொலு அலங்கரிக்கப்பட்டு உள்ளது. மூங்கில்கள், இயற்கைச் செடிகள், பூக்கள் மற்றும் சாமி சிலைகளுக்கான பிரத்யேக மாலை அலங்காரங்கள் பார்வையாளர்களைப் பெரிதும் கவர்ந்து வருகின்றன



திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஊராட்சி ஒன்றியம், தெற்கு வள்ளியூர் கிராமத்தில் நேற்று 02.10.20206 உத்தமர் காந்தியடிகள் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக மாவட்ட ஆட்சித் தலைவர் ஆனந்த மோகன் கலந்து கொண்டார் இக்கிராம சபைக் கூட்டத்தில் திட்ட இயக்குனர் மகளிர் திட்டம் பொன்னியின் செல்வன். வேளாண்மை இணை இயக்குநர் பூவண்ணன்.உதவி இயக்குனர் ஊராட்சிகள் தெற்கு இங்கர்சால். மாவட்ட ஊராட்சி செயலர் இசக்கியப்பன்.தெற்கு வள்ளியூர் ஊராட்சி மன்ற தலைவர் திருமதி முத்தரசி. துணை தலைவர் திருமதி அன்பு லீலா.உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

# கோவை பீளமேடு பகுதியில் உள்ள பிஎஸ்ஜிஆர் கிருஷ்ணம்மாள் பெண்கள் கல்லூரியில் நடைபெற்ற கல்லூரிகளுக்கு இடையிலான கலாச்சார விழா!

## திரைப்பட நடன இயக்குனர் சபரிஷ் கலந்து கொண்டார்



கோவை பீளமேடு பகுதியில் உள்ள பிஎஸ்ஜிஆர் கிருஷ்ணம்மாள் பெண்கள் கல்லூரியில், கல்லூரிகளுக்கு இடையிலான கலாச்சார விழா கரிஷ்மா 2026 எனும் தலைப்பில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் பிஎஸ்ஜிஆர் கிருஷ்ணம்மாள் மகளீர் கல்லூரியின் செயலாளரும் துணைத்தலைவருமான டாக்டர் யசோதா தேவி வரவேற்புரையாற்றினார்.அப்பொழுது அவர் மாணவ மாணவியர்கள் மத்தியில் கூறியதாவது..

கல்லூரிகளுக்கு இடையிலான இக்கலாச்சார விழா மாணவ மாணவியர்களின் கலைத்திறன், படைப்பாற்றல், மற்றும் தனித்திறமைகளை வெளிபடுத்தும் வகையில் நடைபெற்றதாகவும், இதில் பல்வேறு கல்லூரிகளை சேர்ந்த மாணவ மாணவியர்கள் பங்கேற்று தங்களது திறமைகளை வளர்த்துக் கொள்வதன் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்தார் மாணவர்கள் தங்களுக்குள் இருக்கும் படைப்பாற்றலை அடையாளம் கண்டு அதனை தன்னம்பிக்கையுடன் வெளிப்படுத்த வேண்டும் என்பதையும் அவர் தெரிவித்தார் தொடர்ந்து மாணவியர்களின் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது கல்லூரிகளுக்கு இடையிலான போட்டிகள் மூலம் மாணவர்களுக்கு தங்களது திறமைகளை வெளிப்படுத்துவதற்கும் புதிய அனுபவங்களை பெறுவதற்கும் வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டதாக குறிப்பிட்டார். தொடர்ந்து பி.எஸ்.ஜி.ஆர் கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரியின் முதல்வர் ஹாரத்தி வாழ்த்துரை வழங்கினார். மேலும் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட நடன இயக்குனர்சபரிஷ்,கலந்து கொண்டு மாணவ மாணவியர்களுடன் சுமார் 20 நிமிடங்கள் குத்தாட்டம் போட்டார்.மேலும் மாணவர்களையும் மேடைக்கு அழைத்து ஆட வருமாறு கூறினார் இதனை தொடர்ந்து சுமார் 50 மாணவியர்கள் மேடையில் நடன இயக்குனர் சபரிஷ் உடன் குத்தாட்டம் போட்டனர். இவர்களுடன் பேராசிரியர்களும் குத்தாட்டம் போட்டனர். மாணவ மாணவியர்கள் இருக்கையில் இருந்து கொண்டே நடனமாடியது கான்போரை உற்ச்சாக படுத்தியது. தொடர்த்து நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற கல்லூரி மாணவ மாணவியர்களுக்குசான்றிதழ்கள், பரிசுகள் வழங்கபட்டது

தொடர்ந்து மாணவர் தலைவர் ஜெஸ்ஸிகா வர்ஷினி நன்றி கூறி விழாவை நிறைவு செய்தார்.

# கோவை உப்பிலிபாளையம் பகுதியில் உள்ள சிஎஸ்ஐ தேவாலய அரங்கில், போக்குவரத்து பணியாளர் ஜெய ஐக்கியம் சார்பில் “குடும்ப மனநிறைவு முகாம் – 2026” எனும் நிகழ்ச்சி நடைபெற்றது



கோவையில் போக்குவரத்து பணியாளர் ஜெய ஐக்கியம் மற்றும் கோவை மண்டலம் சார்பில், "குடும்ப மனநிறைவு முகாம் - 2026" எனும் சிறப்பு நிகழ்ச்சி, கோவை உப்பிலிபாளையம் பகுதியில் உள்ள சிஎஸ்ஐ இம்மானுவேல் ஆலயத்தில், நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு சிஎஸ்ஐ. இம்மானுவேல் ஆலயத்தின் தலைமை ஆயர் ராஜேந்திர குமார், தலைமை தாங்கினார். தொடர்ந்து கோவை சரவணா நகர் பகுதியில், உள்ள பெத்லஹேம் ஜாய் ஜெபவீட்டின் தலைமை போதகர் ஜான்பிட்டர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். பேருந்து நடத்துநர்கள் மற்றும் போக்குவரத்து பணியாளர்களின் நலனுக்காகவும், அதிகாரிகளின் இடைச்செருக்கத்திற்காகவும், தங்களின் வாழ்க்கைச் சாட்சியை பகிர்ந்து கொள்ளவும், குடும்பத்துடன் இணைந்து இறைவனை நாடும் வகையிலும் இந்த முகாம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது .இதில் கோவை மாவட்ட போக்குவரத்து பணியாளர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் ரவிச்சந்திரன், ராஜாநம்பி, ராபர்ட்ஜான், குணசேகரன், பிரான்ஸ், சூடே, ராஜேஷ், ஜோசப், ஜெயபால், ராபர்ட் ஜான் மற்றும் அனைத்து சமூக மக்களுக்கும் உதவும் பேரவை அமைப்பின் நிறுவனத் தலைவரும், நோட்டரி வழக்கறிஞருமான புஸ்பானந்தம், ஜெபா, வர்ஷா, வர்ஷினி மோகன்ராஜா, வழக்கறிஞர் குமாஸ்தாகள் லட்சுமி, பால்ராஜ், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஈரோடு பசுஞ்சோலை நண்பர்கள் நலச்சங்கம் சார்பில் காந்தி ஜெயந்தியை முன்னிட்டு மரக்கன்றுகள் நடும் விழா



காந்தி ஜெயந்தியை முன்னிட்டு, ஈரோடு பசுஞ்சோலைநண்பர்கள் நலச்சங்கம் சார்பில் ஈரோடு மாநகராட்சி பெரியசேமூர் புதுக்காலனி சஷ்டி கார்டனில் உள்ள அருள்மிகு ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத்தின் அருகே மரக்கன்றுகள் நடவுசெய்து,அவற்றை பராமரிக்கும் பணி நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சிக்கு சங்கத்தின் தலைவர் வி.தங்கராசு தலைமை வகித்தார். இதில் சிறுவர்,சிறுமியர்கள் மற்றும் அப்பகுதி பொதுமக்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு மரக்கன்றுகளைநட்டு, அவற்றை தொடர்ந்து பராமரிப்பதற்கான பணிகளிலும் ஈடுபட்டனர். சுற்றுச்சூழல் பாதுகாப்பு, பசுமை பரப்பை அதிகரித்தல் மற்றும் மரங்களின் அவசியம் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சி, அப்பகுதி மக்களின் பாராட்டைப் பெற்றது.



காந்தி ஜெயந்தியை முன்னிட்டு மதுரை மேற்கு கருவனூர்ஊராட்சியில் நடைபெற்றகிராம சபை கூட்டத்தில்ஊராட்சி செயலர் மகேஸ்வரி தலைமையில் நடைபெற்றது இதில் வட்டாரா வளர்ச்சி அலுவலர் கள்அங்கன்வாடி பணியாளர்கள்தூய்மை பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் ஏராளமான கலந்து கொண்டனர் அதனைத் தொடர்ந்து சின்னப்பட்டி ஊராட்சி செயலர் வெர்ஜின் ராணி தலைமையிலும் காவனூர் ஊராட்சி செயலாளர் சிவக்குமார் தலைமையிலும் செட்டிகுளம் ஊராட்சி கணேசன் தலைமையிலும் சிறப்பு கிராம சபை கூட்டம்நடைபெற்றது

# உளுந்தூர்பேட்டை மணிக்கூண்டு திடலில் காந்தி சிலைக்கு லட்சிய ஜனநாயக கட்சி நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை



லட்சிய ஜனநாயக கட்சியின் கட்சித் தலைவர் ஜோஸ் சார்லஸ் மார்ட்டின் அவர்களின் ஆணைப்படி,உளுந்தூர்பேட்டை மணிக்கூண்டு திடலில் அமைந்துள்ள மகாத்மாகாந்திசிலைக்கு கட்சிநிர்வாகிகள்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்

மண்டல செயலாளர் அரவிந்த்சாமி தலைமை வகித்தார்

இதில் மாவட்ட செயலாளர் ஜெ. ஆனந்த கிருஷ்ண குரு, மாவட்ட துணைசெயலாளர் சீராளன் சிவகுமார், மாவட்ட மகளிர் அணி செயலாளர் ஜெயமாலினி, மாவட்ட இளைஞரணி செயலாளர் சிவதேவன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் கிருஷ்ணகுமார்,மாவட்ட தொண்டரணி செயலாளர் மதியனூர் சங்கர், மாவட்ட மகளிர் அணி துணைச் செயலாளர் மஞ்சுளா, ஒன்றிய மகளிர் அணி செயலாளர் விசித்திரா,நகரசெயலாளர் ஐயப்பன், திருநாவலூர் ஒன்றிய செயலாளர் முத்தேகஷ், மேற்கு ஒன்றியசெயலாளர் ரவீன், நகர பொருளாளர் ஹரிகோவிந்தன் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# மதுரை மண்டலத்தில் மாட்டுத்தாவணியில் பேருந்து சேவைகளை கலெக்டர் நிஷாந்த் கிருஷ்ணா, எம்.எல்.ஏ.க்கள் கொடியசைத்துத் தொடங்கி வைத்தனர்



, டாக்டர் எம்.ஜி.ஆர் பேருந்து நிலையத்தில் நடைபெற்ற தொடக்க விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. நிஷாந்த் கிருஷ்ணா, தலைமையில் பேருந்து சேவைகள் கொடியசைத்துத் தொடங்கி வைக்கப்பட்டன. சென்னை, கோயம்பேடு, புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் பேருந்து நிலையத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று தொடங்கி வைத்தார்கள்.

அதனைத் தொடர்ந்து, மதுரை மண்டலத்தில் மாட்டுத்தாவணி, டாக்டர் எம்.ஜி.ஆர் பேருந்து நிலையத்தில் நடைபெற்ற தொடக்க விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.நிஷாந்த் கிருஷ்ணா,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் பேருந்து சேவைகள் கொடியசைத்துத் தொடங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில் மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினர் திரு. அ. கல்லாணை, மதுரை மேற்குசட்டமன்றஉறுப்பினர் திரு.எஸ்.ஆர்.தங்கபாண்டியன், மதுரை மத்திய சட்டமன்ற உறுப்பினர் திரு. மதார் பதூருதீன், மதுரை மாநகராட்சி துணை மேயர் (பொறுப்பு மேயர்) திரு. தி. நாகராஜன், மதுரை மாநகராட்சி ஆணையாளர் திரு. கௌரவ் குமார், இ.ஆ.ப.,ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இத்திட்டத்தின் விரிவாக்கத்தின் கீழ், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக மதுரை மண்டலத்தின் மூலம் மாநகர மற்றும் நகர்ப்பகுதிகளில் இயங்கும் 405 சாதாரண கட்டணமில்லா நகரப் பேருந்துகள், 64 எக்ஸ்பிரஸ் (Express) பேருந்துகள், 196 டீலக்ஸ் (Deluxe) பேருந்துகள் என மொத்தம் 665 நகரப் பேருந்துகளும், மேலும் 40 புறநகர்ப் பேருந்துகளும் (Mofussil) சேர்த்து மொத்தம் 705 பேருந்துகள் மகளிருக்காக இயக்கப்படவுள்ளன.இத்திட்டத்தில் மகளிர் மட்டுமின்றி திருநர்களும் கட்டணமில்லாப் பயணங்களை மேற்கொள்ளலாம். மேலும், இதில் பயன்பெற எவ்வித வருமான உச்சவரம்போ அல்லது பயண எண்ணிக்கைக் கட்டுப்பாடுகளோ கிடையாது. கல்லூரி மாணவிகள், பணிக்குச் செல்லும்பெண்கள் மற்றும் வணிகம் உள்ளிட்ட அத்தியாவசியத்தேவைகளுக்காகப் பயணிக்கும் மகளிர் அனைவருக்கும் இத்திட்டம் பாதுகாப்பான பயணச் சுதந்திரத்தையும்பொருளாதாரத் தன்னிறைவையும் வழங்கும் முக்கிய சமூக முதலீடாக அமையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் மதுரை மேலாண் இயக்குனர் திரு.வி.சரவணன்,பொது மேலாளர்திரு.ஜெ.பாலமுருகன், அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்



உத்தமர் அண்ணல் காந்தியடிகள் 158 வது பிறந்த நாளை முன்னிட்டு ஈரோடு மாநகராட்சி, கச்சேரி வீதி, காதிகிராப்டில் தீபாவளி சிறப்பு தள்ளுபடி முதல் விற்பனையினை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, நேற்று (02.10.2026) துவக்கி வைத்தார்.



"உத்தமர் அண்ணல் காந்தியடிகள் 158 வது பிறந்த நாள்"ஈரோடுமாவட்டம்,பவானிவட்டம்,சலங்கபாளையம் பேரூராட்சிக்குட்பட்ட செந்தாம்பாளையத்தில் உள்ள தேசபிதா மகாத்மா காந்தி அன்னை கஸ்தூரி ஆலய ஸ்ரீ சர்வேஷ்வரி உடனுறை சக்தீஸ்வரர் ஸ்ரீ காசி காலபைரவர் திருக்கோவிலில் அமைக்கப்பட்டுள்ள தேசபிதா மகாத்மா காந்தி அவர்களின் சன்னதியில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, நேற்று (02.10.2026) வழிபட்டார்.



மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் அறிவுறுத்தலின்படியும், ஈரோடு மாவட்ட சட்டப்பணிகள்ஆணைக்குழுவின்தலைவர்/முதன்மைமாவட்டநீதிபதிவழிகாட்டுதலின்படியும் ஈரோடு ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் அமைந்துள்ள மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு மூலம் போதைப்பொருள் விழிப்புணர்வு குறித்த கருத்தரங்கானது ஈரோடு மாவட்டம் வாய்க்கால்மேடு, பெருந்துறை ரோட்டில் உள்ள நந்தா பொறியியல் கல்லூரியில் 01.10.2026 அன்று 03.00 மணிக்கு நடைபெற்றது. மேற்படி கருத்தரங்கில் இரண்டாம் கூடுதல் சார்பு நீதிபதி T. பிரவின்குமார் , போதைப் பொருள் பழக்கத்தினால் ஏற்படும் உடல்நலக்கேடு, சமூகசீர்க்கேடுபற்றிவிழிப்புணர்வுஏற்படுத்தினார்.மேலும்போதைப்பொருள்குறித்ததிட்டங்கள் குறித்து கூறினார். அதுமட்டுமின்றி எவ்வாறெல்லாம் விழிப்புணர்வு ஏற்படுத்தலாம் என்றும் அதற்கான வழிமுறைகள் என்னவென்றும் மாணவர்களுக்கு எடுத்துரைத்தார். இறுதியாக போதைப்பொருள் பழக்கத்திற்கு அடிமையானவர்கள் அதிலிருந்து மீண்டு வர மறுவாழ்வு மையங்கள், மருத்துவ வசதிகள் இருக்கிறது என கூறினார். மேலும் இந்த கருதரங்கிற்கான ஏற்பாடுகளை மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு செயலர் R. ஸ்ரீவித்யா செய்திருந்தார்.

# ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கந்தசாமி ஈரோடு மத்திய பேருந்து நிலையத்தில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக பேருந்து சேவையினை கொடியசைத்து துவக்கி வைத்தார்



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை கோயம்பேடு பேருந்து நிலையத்தில் வெற்றிப்பயணம் திட்டத்தை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, ஈரோடு மத்தியபேருந்துநிலையத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி பொதுமக்களின் பயன்பாட்டிற்காக பேருந்து சேவையினை கொடியசைத்து நேற்று (02.10.2026) துவக்கி வைத்து, பேருந்தில் பயணித்த மகளிர்களுக்கு கட்டணமில்லா பேருந்து பயணச்சீட்டினை வழங்கினார்.

ஈரோடு மண்டலத்தில் இயக்கப்படும் சாதாரண கட்டண335புறநகர்பேருந்துகளில் மகளிர் கட்டணமில்லாமல் பயணம் மேற்கொள்ளலாம். ஏற்கனவே ஈரோடு மண்டலத்தில் 304 நகர பேருந்துகளில் மகளிர்க்கான வெற்றிப் பயணம் செயல்பாட்டில் உள்ளது.

நகரப்பேருந்துகளில் நாளொன்றிற்கு சுமார் 3.25 லட்சம் மகளிர் வெற்றிப் பயணம் செய்து வருகின்றனர். தற்போது இத்திட்டத்தின் மூலம் புறநகர் பேருந்துகள் மூலம் ஈரோடு- கோபி, ஈரோடு-சத்தி, ஈரோடு-நாமக்கல், ஈரோடு-ராசிபுரம், ஈரோடு- சேலம், ஈரோடு-கரூர், ஈரோடு-அந்தியூர், ஈரோடு கொடுமுடி உள்ளிட்ட முக்கிய வழித்தடங்களில் இயக்கப்படும் புறநகர் பேருந்துகளிலும் மகளிர் மற்றும் திருநங்கைகள் கட்டணமின்றி பயணம் மேற்கொள்ளும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (ஈரோடுமண்டலம்)பொது மேலாளர் என். முத்துக்குமாரசாமி, துணை மேலாளர் வணிகம் என் ராஜேந்திரன், உட்படதுறைசார்ந்தஅலுவலர்கள் கலந்து கொண்டனர்.



உலகத்திறன்போட்டிகளில்பங்கேற்றுவெற்றிபெற்ற ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த செல்வன் சுரேந்திரன் அவர்கள் மற்றும் செல்வன் ராகுல் அவர்கள், ஆகியோர் தாங்கள் பெற்ற விருது மற்றும் பதக்கங்களை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி அவர்களிடம் நேற்று (1.10.2026) காண்பித்து வாழ்த்துப் பெற்றார்கள்.



உத்தமர் அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாளை முன்னிட்டு ஈரோடு மாவட்டம், எலவமலை ஊராட்சி, அய்யம்பாளையம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற கிராம சபா கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக மாவட்ட ஆட்சித்தலைவர் ச. கந்தசாமி, நேற்று (02.10.2026) பங்கேற்றார்.



உத்தமர் அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாளை முன்னிட்டு ஈரோடு மாவட்டம், எலவமலை ஊராட்சி, அய்யம்பாளையம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற கிராம சபா கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, நேற்று (02.10.2026) பங்கேற்று மரக்கன்றுகளை நட்டார்.

# Abhijeet Dipke explains why CJP is holding Mumbai protest against poll panel despite Jantar Mantar agitation outcome

*Abhijeet Dipke's Cockroach Janta Party (CJP) is set for its much-anticipated 'Jail Bharo Andolan' against chief election commissioner Gyanesh Kumar at Shivaji Park in Maharashtra's Mumbai on Friday.*

*While the immediate trigger for the protest is a news investigation that claimed an internal rift within the Election Commission, the decision to launch the agitation in Mumbai and not Delhi – where its earlier Jantar Mantar agitation against examination irregularities led to the resignation of education minister Dharmendra Pradhan – is deliberate.*



*Track live updates from CJP protest hereThe agitation was slated to start at 4 pm on Friday near Gate No 6 of Chhatrapati Shivaji Maharaj Park in Mumbai, Abhijeet Dipke said on Thursday, adding that the stir will subsequently be taken to different parts of the country – such as Goa and Kolkata -- before culminating in a sit-in at Jantar Mantar, New Delhi. "It will continue till Kumar resigns," he said.*

*Addressing a press conference in Mumbai on Thursday, CJP leader Abhijeet Dipke explained the reasoning behind the choice.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004, Editor FARUK ALI M.